உ



# இரணியல் கீழத்தெரு திருச்செந்தூர் காவடிக்கட்டு அன்னதானக்குழு



கீழத்தெரு - இரணியல்

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒரு கைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவோம்

அன்புடையீர்!

நிகழும் 1187 ம் ஆண்டு மாசி மாதம் 14 ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (26-2-2012) ஸ்ரீசிங்கரட்சக விநாயகர் கோவிலில் வைத்து முன்பதிவு போல் திருச்செந்தூர் மாசித்திருவிழா காவடிக்கட்டு வைபவத்தன்று பகல் 11.50 மணியளவில் ஓர் அன்னதானமும் 1-3-2012 வியாழக்கிழமை பகல் 11.50 மணி அளவில் காவடி அபிஷேகத்தன்று திருச்செந்தூரிலுள்ள இரணியல் கீழத்தெரு செட்டி சமுதாய புதிய கட்டிடத்தில் வைத்து ஓர் அன்னதானமும் மிக விமர்சையாக நடைபெறவுள்ளது. எனவே தாங்கள் மேற்படி அன்னதானங்களுக்கு தங்களால் இயன்ற பொருள் உதவியும், பண உதவியும் மற்றும் முழு ஒத்துழைப்பும் தந்து விழாவினை சிறப்பித்து செந்திலாண்டவன் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இவண்
நிர்வாக கமிட்டி தீர்மானப்படி
**A.K. குமார்**
செயலாளர்

இரணியல்
9-1-2012.

திருச்செந்தூர் காவடிக்கட்டு அன்னதானக்குழு
கீழத்தெரு, இரணியல்
நெய்யூர் அஞ்சல் - 629 802.

குறிப்பு : மேற்படி அன்னதானத்திற்கு நன்கொடை செய்ய விரும்புகிறவர்கள் செயலாளர் பெயரில் M.O. அல்லது இரணியல் கீழத்தெரு திருச்செந்தூர் காவடிக்கட்டு அன்னதானக்குழு பெயரில் காசோலை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கோவில் சம்பந்தப்பட்ட விழாக்கள் பற்றிய விபரங்கள் அறிய www.ssrvderaniel.com என்ற இணைய தளத்தில் பார்வையிடவும்.

ரீகல் பிரஸ், திங்கள்நகர்.